பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

09 10 2026 06 45

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி புதுதில்லியில் இன்று மகளிர் நலன் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை சார்ந்த உச்சி மாநாட்டின் நிறைவு நிகழ்ச்சியில் உரையாற்றுகிறார்.

2. புற்றுநோய் சிகிச்சைக்கான மருந்துகளின் விலையை கட்டுப்படுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

3. மதுராந்தகம், தாராபுரம் சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலில் பதிவான வாக்குகள் இன்று எண்ணப்பட உள்ளன.

4. சுற்றுச்சூழல் விதிமுறைகளை பின்பற்றாத சாயப்பட்டறைகளுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என்று மாநில சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. ராஜீவ் தெரிவித்துள்ளார்.

5. இந்தியா-ஏ, ஆஸ்திரேலியா-ஏ அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி புதுச்சேரியில் இன்று நடைபெற உள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<><><><><><><>

பிரதமர் திரு. நரேந்திர மோடி, மகளிர் நலன் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு துறை சார்ந்த உச்சி மாநாட்டின் நிறைவு நிகழ்ச்சியில் இன்று உரையாற்றுகிறார்.

புதுதில்லியில் நேற்று தொடங்கிய இந்த மாநாட்டில் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை சேர்ந்த மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகள் பங்கேற்றுள்ளனர்.

மத்திய மாநில அரசுகளுக்கு இடையிலான உறவை மேம்படுத்தி தேசிய முன்னுரிமை சார்ந்த திட்டங்களை அமல்படுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக இந்த மாநாட்டில் விவாதிக்கப்படுகிறது.

குழந்தைகள் மற்றும் கருவுற்ற தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து நிறைந்த உணவுகளை வழங்குதல், அங்கன்வாடி மையங்களை மறுசீரமைத்தல் தொடர்பாகவும் இந்த மாநாட்டில் விவாதிக்கப்படுகிறது.

பெண்களுக்கான சட்டங்களை திறமையாகவும், முறையாகவும் அமல்படுத்துவதன் மூலம் அவர்களுக்கான பாதுகாப்பை உறுதி செய்வது தொடர்பாகவும் முக்கியமான நலத்திட்டங்களில் பெண்களுக்கான பங்களிப்பை உறுதிபடுத்தவும், இந்த மாநாட்டில் விவாதிக்கப்படுகிறது.

<><><><><><><>

புற்றுநோய் சிகிச்சைக்கான மருந்துகளின் விலையை கட்டுப்படுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த மருந்துகளின் விநியோகம் மற்றும் விற்பனையின் போது விதிக்கப்படும் லாபத்திற்கு மத்திய அரசு உச்சவரம்பு விதித்துள்ளது.

மருந்துகளின் அதிகபட்ச சில்லறை விலையில் லாபம் என்பது 30 சதவீதம் வரை மட்டுமே இருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் புற்றுநோய்களுக்கான மருந்துகளின் விலை 70 சதவீதம் வரை குறையும் என்றும் மத்திய அரசு கூறியுள்ளது.

லாபத்திற்கான உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளதால், இந்நோயால் பாதிக்கப்பட்டவர்கள் ஆண்டுக்கு 2 ஆயிரத்து 500 கோடி ரூபாய் வரை சேமிக்க முடியும்.

நாட்டில் ஒரு லட்சம் மக்கள் தொகையில் சுமார் 60 பேர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அதற்கான மருந்துகளின் விலையை கட்டுப்படுத்த வேண்டும் என்று பல்வேறு தரப்பிலிருந்து வந்த கோரிக்கையை அடுத்து, மத்திய அரசு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

<><><><><><><>

மதுராந்தகம், தாராபுரம் சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலில் பதிவான வாக்குகள் இன்று எண்ணப்பட உள்ளன.

மதுராந்தகம் தொகுதியில் பதிவான வாக்குகள் 22 சுற்றுகளாக எண்ணப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

தாராபுரம் தொகுதியில் பதிவான வாக்குகள் 23 சுற்றுகளாக எண்ணப்பட உள்ளது என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<><><><><><><>

அஇஅதிமுகவை சேர்ந்த 6 சட்டமன்ற உறுப்பினர்கள் ராஜினாமா செய்ததை ஏற்று சட்டப்பேரவை தலைவர் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம் இன்று தீர்ப்பு அளிக்கிறது.

சட்டப்பேரவையில் திரு. விஜய் தலைமையில் த.வெ.க. அரசு புதிதாக பொறுப்பேற்று நம்பிக்கைக்கோரும் தீர்மானத்தை தாக்கல் செய்த போது அஇஅதிமுக கொறடா உத்தரவை மீறி அரசுக்கு ஆதரவாக

வாக்களித்ததாக அம்பாசமுத்திரம் தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. இசக்கி சுப்பையா, விராலிமலை தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. சி. விஜயபாஸ்கர் உள்ளிட்ட 6 பேரை தகுதிநீக்கம் செய்யக்கோரி அஇஅதிமுக சார்பில் பேரவை தலைவரிடம் அளிக்கப்பட்ட மனு

நிலுவையில் இருக்கும் போது அவர்களின் ராஜினாமாவை பேரவைத் தலைவர் ஏற்றுக்கொண்டது சரியல்ல என்று அஇஅதிமுக சார்பில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

ராஜினாமாவை ஏற்றதில் எந்தவித விதிமீறலும் இல்லை என்றும் சட்டத்திற்குட்பட்டுத்தான் இந்த விஷயத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பேரவைத் தலைவர் சார்பில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு மீதான விசாரணை முடிவடைந்துள்ள நிலையில், இன்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

<><><><><><><>

சுற்றுச்சூழல் விதிமுறைகளை பின்பற்றாத சாயப்பட்டறைகளுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என்று மாநில சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. ராஜீவ் தெரிவித்துள்ளார்.

சேலம் மாவட்டம் எருமாபாளையம், களரம்பட்டி பகுதிகளில் உள்ள தனியார் சாயமிடும் தொழிற்சாலைகளில் நேற்று ஆய்வு செய்த பின்னர், செய்தியாளர்களிடம் பேசுகையில் இதனை அவர் தெரிவித்தார்.

சுற்றுச்சூழல் மேலாண்மை முறைகள், மாசு கட்டுப்பாடு நடவடிக்கைகள், சுற்றுச்சூழல் விதிமுறைகள் ஆகியவற்றை சாயப்பட்டறைகள் கண்டிப்புடன் பின்பற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

சேலம் மாவட்டத்தில் அனுமதி பெற்று கட்டப்பட்டுள்ள சாயப்பட்டறை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் பணிகள் முறையாக நடைபெறுகிறதா என்பதையும் அடிக்கடி அதிகாரிகள் ஆய்வு செய்து வருவதாகவும் அவர் கூறினார்.

<><><><><><><>

வளிமண்டல சுழற்சி காரணமாக கோவை, திருநெல்வேலி மாவட்டங்களின் மலைப்பகுதிகள் மற்றும் நீலகிரி, தேனி, தென்காசி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இன்று கனமழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

திருநெல்வேலி, தூத்துக்குடி, ராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை உள்ளிட்ட 17 மாவட்டங்களில் ஒருசில இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையை பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், இரவு மற்றும் அதிகாலை நேரங்களில் ஒருசில பகுதிகளில் லேசான மழைக்கு வாய்ப்பு உள்ளதாகவும் வானிலை மையம் கூறியுள்ளது.

<><><><><><><>

ஈரானுடன் பொருளாதார தொடர்பு வைத்திருந்ததாக 27 நிறுவனங்களுக்கு எதிராக அமெரிக்கா புதிய தடையை விதித்துள்ளது.

<><><><><><><>

சவூதி அரேபிய தலைநகர் ரியாத்தில் உள்ள இந்தியர்கள் தேவையில்லாமல் வெளியில் செல்வதை தவிர்க்க வேண்டும் என்று இந்திய தூதரகம் அறிவுறுத்தியுள்ளது.

<><><><><><><>

திபெத் குறித்த இந்திய கல்வியாளர்கள் மாநாடு தரம்சாலாவில் நேற்று தொடங்கியது.

<><><><><><><>

போதை மருந்துகளுக்கு எதிராக விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், திரிபுரா மாநகர காவல்துறையினர் 3 ஆயிரம் கிலோமீட்டர் மோட்டார் சைக்கிள் பயணத்தில் ஈடுபட்டுள்ளனர்.

<><><><><><><>

தில்லியில் ஆக்கிரமிப்பு கட்டிடங்கள் மீதான நடவடிக்கை தொடரும் என்று மாநகராட்சி நிர்வாகம் அறிவித்துள்ளது.

<><><><><><><>

காஞ்சிபுரத்தில் உள்ள சங்கரா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வாக்காளர் விழிப்புணர்வு குறித்த நிகழ்ச்சியை நேற்று மாவட்ட ஆட்சியர் திருமதி. சினேகா தொடங்கி வைத்து உரையாற்றினார்.

<><><><><><><>

திருவள்ளூர் மாவட்டத்தில் வன்கொடுமை தொடர்பான வழக்குகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அதிகாரிகளை மாவட்ட ஆட்சியர் திருமதி. கவிதா கேட்டுக் கொண்டுள்ளார்.

<><><><><><><>

பெரம்பலூர் மாவட்டத்தில் பொது விநியோகம் திட்டம் தொடர்பான குறைதீர் முகாம் நாளை வாலிகண்டபுரம், கூடலூர், லாடாபுரம் உள்ளிட்ட நான்கு கிராமங்களில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<><><><><><><>

இந்திய தர நிர்ணயம் அமைவனம் சார்பில் நீர்வளத்துறை அலுவலர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி சென்னையில் நேற்று நடைபெற்றது.

<><><><><><><>

காசநோய் இல்லாத இந்தியாவை உருவாக்கும் இயக்கம் தொடர்பாக மாநகராட்சி சுகாதாரத்துறை அதிகாரிகளுக்கான பயிற்சி முகாம் சென்னையில் நேற்று நடைபெற்றது.

<><><><><><><>

இந்தியா ஏ - ஆஸ்திரேலியா ஏ அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெற உள்ளது.

புதுச்சேரியில் நடைபெற உள்ள இந்தப்போட்டி இன்று காலை 9 மணிக்கு தொடங்குகிறது.

<><><><><><><>

இந்தியா-வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கிடையேயான இரண்டாவது டுவென்டி-டுவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெற உள்ளது.

ராஞ்சியில் இந்தப்போட்டி இன்றிரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

<><><><><><><>

ஆர்ட்டிக் ஓபன் பேட்மிண்டன் மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதியில் பி.வி. சிந்து இன்று தாய்லாந்தின் Ratchanok Intanonவை எதிர்கொள்கிறார்.

இதற்கு முன்பு இருவரும் 14 போட்டிகளில் பங்கேற்றுள்ளனர். அதில் Ratchanok -யை 10 முறையும், சிந்து 4 முறையும் வெற்றி பெற்றுள்ளனர்.

<><><><><><><>

நடப்பு சீசனுக்கான ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டிகள் நாளை தொடங்க உள்ளன.

ஜனவரி மாதம் 17 ஆம் தேதிவரை நடைபெற உள்ள இந்தப் போட்டியில் சென்னை, மும்பை, டெல்லி உள்ளிட்ட 13 அணிகள் பங்கேற்கின்றன.

முதன்முறையாக இந்த ஆண்டுக்கான ஐ.எஸ்.எல். கால்பந்து சீசனில் புகழ்பெற்ற சர்ச்சில் பிரதர்ஸ் அணி பங்கேற்கிறது.

<><><><><><><>